**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண். 020958 / பி1 / 2021** **நாள் : 12.11.2021**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** 2021–2022-ம் கல்வி ஆண்டு 2022 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு – தனித்தேர்வர்கள் அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்புகளில் சேர்த்தல் குறித்த – செய்திக்குறிப்பு வெளியிடுதல் – சார்ந்து.

-----

2021-2022-ஆம் கல்வி ஆண்டு, 2022-ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கவுள்ள அனைத்து வகை தனித்தேர்வர்களும் அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் பெயர்களைப் பதிவு செய்து கொள்வது குறித்த **“செய்திக்குறிப்பு”** இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. இச்செய்திக்குறிப்பினை இணைப்பில் உள்ளவாரே அனைத்து தனித்தேர்வர்களும் மற்றும் பொது மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளேடுகள், வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்தியாக வெளியிடவும் மற்றும் ஒலி/ஒளி பரப்பிடவும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**“இது விளம்பரம் அல்ல”** எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

**இணைப்பு :** செய்திக் குறிப்பு
**நகல்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – **18.11.2021 முதல் 03.12.2021 வரை** அறிவியல் செய்முறை பயிற்சி வகுப்பில் தனித்தேர்வர்களின் பெயர்களை சேர்க்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, தயார் நிலையிலிருக்குமாறு தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்திட மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் – தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைக்காகவும்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் – இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை உள்ளூர் பத்திரிக்கைகள், ஊடகங்களில் தொடர்ந்து செய்தியாக வெளியிடவும் மற்றும் வானொலி / தொலைக்காட்சிகளில், ஒலி / ஒளிபரப்பிடவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

## நுஅரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006

## 2021–2022 ஆம் கல்வி ஆண்டு, 2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு அறிவியல் பாட செய்முறை பயிற்சிக்கு பதிவு செய்வது தொடர்பான

## செய்திக் குறிப்பு

2021–2022 ஆம் கல்வி ஆண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்கவுள்ள நேரடித் தனித் தேர்வர்களும் (முதன் முறையாக அனைத்துப் பாடங்களையும் தேர்வு எழுத இருப்பவர்கள்) ஏற்கனவே 2012க்கு முன்னர் பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதி அறிவியல் பாடத்தில் தோல்வியுற்றவர்களும், அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்பில் சேர பெயர்களை பதிவு செய்துக் கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

**அனைத்து தனித் தேர்வர்களும் 18.11.2021 (வியாழக்கிழமை) முதல் 03.12..2021 (வெள்ளிக்கிழமை) –க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் தங்களின் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.** மாவட்டக் கல்வி அலுவலரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பள்ளிகளுக்குச் சென்று செய்முறைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி வகுப்புகளுக்கு 80% வருகை தந்த தனித்தேர்வர்கள் மட்டுமே 2021–2022 ஆம் கல்வி ஆண்டில் 2022 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர். செய்முறைப் பயிற்சி பெற்ற தேர்வர்கள் அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலரை தொடர்பு கொண்டு செய்முறைத் தேர்வு நடத்தப்படும் நாட்கள் மற்றும் மைய விவரம் அறிந்து செய்முறைத் தேர்வினை தவறாமல் எழுதிட வேண்டும்.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளுமாறு தேர்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதற்கான விண்ணப்பப் படிவத்தினை **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் **18.11.2021** முதல் **03.12.2021** வரை பதிவிறக்கம் செய்து, விவரங்களை பூர்த்தி செய்து இரண்டு நகல் எடுத்து சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களிடம் தனித்தேர்வர்கள் **03.12.2021** க்குள் நேரில் ஒப்படைத்தல் வேண்டும்.

ஒம்/–
இயக்குநர்

சென்னை – 6
நாள் : 12.11.2021.

**2021– 2022 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் கலந்து கொள்ள நடத்தப்படும் அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்புகளில் சேர்தலுக்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுரைகள்**

1. தேர்வர் விண்ணபபத்திலுள்ள அனைத்து கலங்களையும் தவறாது பூர்த்தி செய்தல் வேண்டும்.
2. **இவ்விண்ணப்பப் படிவமானது இரண்டு படிவங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். செய்முறை வகுப்பிற்கான கட்டணம் ரூ.125/– பணமாக அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும்.**
3. கீழ்க்கண்ட கல்வித் தகுதிகளையுடைய தேர்வர்கள் மட்டுமே தேர்வெழுத அனுமதிக்கப்படுவர்.

 (i) நேரடி தனித்தேர்வர்கள்:

(அ) **2022 தேர்வு நடைபெறும் மாதத்தின் முதல் நாளன்று 14 1/2 வயது பூர்த்தி செய்திருக்க வேண்டும்.** மத்திய மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 8–ஆம் வகுப்பு தேர்வில் ஆங்கிலத்துடன் தேர்ச்சி பெற்றுள்ள மாணவ/மாணவியரும் மற்றும் 9ம் வகுப்பு பயின்று இடையில் நின்ற மாணவ/மாணவியரும், தேர்வுத் துறையால் நடத்தப்படும் எட்டாம் வகுப்பு (ESLC) பொதுத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றவர்களும் இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வை எழுதலாம்.

(ஆ) அனைவருக்கும் கல்வி இயக்ககத்தின் கல்வி காப்புறுதி திட்டத்தின் கீழ் பயின்று 8– ம் வகுப்புத் தேர்ச்சி பெற்றதாக மாற்று சான்றிதழ் பெற்றவர்கள்.

(இ) உண்டு உறைவிடப்பள்ளியில் 8–ம் வகுப்புத் தேர்ச்சி பெற்றதாக மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.

(ஈ) திறந்தவெளி பள்ளியில் “C” Level சான்றிதழ் பெற்றவர்கள்.

(உ) 14 1/2 வயதை பூர்த்தி செய்த உழைக்கும் சிறார் கல்வி திட்டத்தின் கீழ் தொழிலாளர் அமைச்சகம் இந்திய அரசின் கீழ் வழங்கப்பட்ட முறைசாராக் கல்வி மாற்றுச் சான்றிதழ் பெற்றவர்கள்.

(ஊ) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட திறந்தவெளிப் பள்ளியில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள் தேர்வு நடைபெறும் மாதத்தின் முதல் தேதியன்று 14 1/2 வயது பூர்த்தி செய்யும்பட்சத்தில் திறந்த வெளி பாடத் திட்டத்தில தேர்வெழுதி தேர்ச்சி பெறாத பாடங்களை மட்டும் தனித்தேர்வர்களாக 2021-2022 ஆம் கல்வி ஆண்டில் நடைபெறவிருக்கும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்.

 (ii) ஏற்கனவே தேர்வெழுதி தோல்வியுற்ற தனித்தேர்வர்கள்:

முந்தைய ஆண்டுகளில் பழைய பாடத்திட்டத்தில்/சமச்சீர்கல்வி பாடத்திட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதி அறிவியல் பாடத்தில் தோல்வியுற்று, செய்முறைப் பயிற்சி வகுப்பிற்கு பெயர் பதிவு செய்திராத தனித்தேர்வர்கள் மேற்குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் பெயர் பதிவு செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. **சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான வண்ண நிழற்படத்தை மட்டுமே ஒட்ட வேண்டும். கருப்பு வெள்ளையிலான நிழற்படத்தை ஒட்டக்கூடாது.**

ஒம்/–
அரசுத் தேர்வுகள் இயக்குநர்

**2021-2022 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் கலந்து கொள்ள நடத்தப்பெறும் செய்முறை பயிற்சி வகுப்புகளில் பதிவிற்கான விண்ணப்பம். (விண்ணப்பம் இரண்டு படிவங்களில் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)**

சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான புகைப்படம் ஒட்டவும்

| | | |
|---|---|---|
| 1. | தேர்வரின் பெயர் | : |
| 2. | தாயார்/தந்தையார்/பாதுகாவலர் பெயர் | : |
| 3. | பாலினம் | : |
| 4. | பிறந்ததேதி | : |
| 5. | 01.03.2022 அன்றுள்ளபடி வயது | : |
| 6. | நிரந்தர முகவரி | : |
| 7. | அஞ்சல் முகவரி | : |
| 8. | கல்வித் தகுதி | : |
| 9. | செய்முறை வகுப்பில் பயில விரும்பும் மொழி | : |
| 10. | மாற்றுத் திறனாளியாக இருப்பின் எவ்வகையைச் சார்ந்தவர் ? | : |
| 11. | தேர்வுக் கட்டண விவரம் தொகை ரூ.125/– பணமாக செலுத்த வேண்டும் | : |
| 12. | தொலைபேசி/கைபேசி எண் | : |
| 13. | ரூ.5/–ற்கான சுயமுகவரியிடப்பட்ட அஞ்சல் உறை இணைக்கப்பட்டுள்ளதா ? | : |

மேலே தெரிவிக்கப்பட்ட தகவல்கள் யாவும் உண்மை என உறுதியளிக்கிறேன்.

பெற்றோர் /பாதுகாவலரின் கையொப்பம்

விண்ணப்பதாரரின் கையொப்பம்.
இடம்:
நாள்:

---

## அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ஒதுக்கீடு செய்யப்பட்ட செய்முறை வகுப்பிற்கான மையம்

இருக்கை உதவியாளர் கண்காணிப்பாளர் மாவட்டக் கல்வி அலுவலர்.

---

## பற்றுச்சீட்டு

ரூ.125/– (ரூபாய் நூற்றி இருபத்தைந்து மட்டும்) –––––– (பிறந்த தேதி) ––––––––

என்பவரிடமிருந்து 2022 ல் நடைபெறும் SSLC தேர்வு அறிவியல் செய்முறைப் பயிற்சிக்காக பணமாக பெறப்பட்டது.

**கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை**

**Application for Enrollment to Practical Training Classes for the SSLC Public Examination for the academic year 2021-2022 (This form should be submitted in Duplicate to the respective District Educational Office)**

Affix here a recent Passport size Photo

| | | |
|---|---|---|
| 1 | Name of the Applicant | : |
| 2 | Father's Name/Mother's Name/Guardian's Name | : |
| 3 | Sex | ; |
| 4 | Date of Birth | : |
| 5 | Age as on 01.03.2022 | : |
| 6 | Permanent Residential Address | : |
| 7 | Address for Communication | : |
| 8 | Educational Qualification | : |
| 9 | Medium chosen for Practical classes | : |
| 10 | State whether Physically challenged. If, so mention the nature of physical challenge | : |
| 11 | Fee Particulars Amount Rs.125/- by cash | : |
| 12 | Contact Phone Number | : |
| 13 | Whether Self Addressed cover with Postal stamp for Rs.5/- enclosed | : |

I do hereby declare that the particulars given above are true and to the best of my knowledge.

Signature of the Parent/Guardian

Signature of the Student
Place:
Date:

---

For office use only

Name of Practical Class Centre Alloted:

Seat Assistant Superintendent DEO

---

Receipt

Received Rs.125/-(Rupees One Hundred and twenty five only) from --------- D.O.B. -------------by cash towards SSLC 2022 Science Practical training fees.

Signature with office seal